# அலோபிசியா ஏரியேட்டா (Alopecia areata)

இது புழுவெட்டு என்று அழைக்கப்பட்டாலும் கூட இது பூச்சியாலோ புழுவாலோ ஏற்படும் நோய் அல்ல.

ஆண்களும் பெண்களும் இந்நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

இது நோய் எதிர்ப்பு சக்தியில் ஏற்படும் மாற்றத்தினால் ஏற்படுகிறது என நம்பப்படுகிறது. சில வேளைகளில் மனஅழுத்தம் இதற்கு காரணமாக அமையலாம்.

இது தொடுகை மூலம் பரவாது. இது விற்றமின் குறைபாட்டினாலோ, போசணைக்குறைபாட்டினாலோ ஏற்படும் நோய் அல்ல.

## 1) இதற்குரிய குணம்குறிகள் யாவை?

பகுதியாக அல்லது வட்ட வடிவமாக ஒரு பகுதியில் முடி கொட்டுதல்.

இதனால் தலையில் அரிப்போ, நோவோ ஏற்படாது.

சிறிய ஒரு இடத்தில் அல்லது பல இடங்களில் ஏற்படலாம்.

சில வேளைகளில் இது முழு தலைப்பகுதியையும், அல்லது உடலிலுள்ள மற்றைய முடிகளையும் பாதிக்கலாம்.

முடி புதிதாக வளரும் போது முதலில் வெள்ளை நிறமாக இருக்கும். பின்னர் வழமையான நிறத்திற்கு மாற்றமடையும்.

சில நோயாளிகளுக்கு நகத்தில் குழிகள் ஏற்படலாம்.

## 2) இந்தநோய் எவ்வாறு அடையாளம் காணப்படுகிறது?

இது தோல் வைத்திய நிபுணரால் பரிசோதனை செய்வதன் மூலம் அடையாளம் காண முடியும். சிலவேளைகளில் Skin Biopsy மூலம் உறுதிப்படுத்த முடியும்.

சில இரத்த பரிசோதனைகளை செய்வதன் மூலம் தைரொயிட் சுரப்பிகளில் கோளாறு மற்றும் சலரோகம் இருப்பதனை அறிந்து கொள்ள முடியும். நோய் எதிர்ப்பு சக்தியோடு தொடர்புபடுவதால் இந்த நோயாளிக்கு மேற்கண்ட நோய்கள் சேர்த்து இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது.

## 3) இதற்குரிய சிகிச்சைமுறைகள் யாவை?

சிலவேளைகளில் முடி எந்தவொரு சிகிச்சை முறைகளுமின்றி திரும்ப வளரும்.
(ஆனால் மீண்டும் முடி உதிர்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது)
தானாக முடி வளராத சந்தர்ப்பங்களில் பாவிக்கப்படும் சிகிச்சை முறைகள்

- Steroid எனப்படும் பூசும் மருந்துகள்
- தலைமுடி உதிர்ந்த இடத்தில் மட்டும் ஊசி மூலம் steroid எனப்படும் மருந்தேற்றல்.
- Oral Steroid mini Pulse
- Methotrexate
- ஒளிச்சிகிச்சை (UVA / UVB)
- குருதிச்சிறுதட்டுக்கள் செறிவாக்கப்பட்ட குருதித்திரவத்தை ஊசி மூலம் ஏற்றுதல் (PRP)
- வேறு முறைகள் - Wigs (பொய்முடி, டோப்), Camouflage (உருவமறைப்பு)

இந்த நோயால் எந்தவொரு உடல் உறுப்புகளுக்கும் பாதிப்பு ஏற்படாது.
ஆரம்ப நிலைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்வதன் மூலம் மனஅழுத்தம், சமூக அழுத்தத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.